இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு வேண்டியமட்டும் கிடைத்தது. அவர்கள் வயிறார உண்டபின், "ஒன்றும் வீணாகாதபடி, எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள்" என்று தம் சீடரிடம் கூறினார். மக்கள் உண்டபின் ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துச் சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள். (யோவான் 6:11-13)



# கிறிஸ்துவின் அழகினால் நம்மை நிரப்ப வேண்டும்

## திருத்தந்தை அறிவுறுத்தல்

**வத்திக்கான்:** பதினாறாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் உருவான சில துறவற சபைகளைச் சார்ந்த அருள்சகோதரிகளை அவர்களின் பொதுப்பேரவையை முன்னிட்டு கடந்த ஜூலை 15 திங்கள்கிழமை வத்திக்கானில் சந்தித்தபோது மேற்கண்டவாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

துறவற வாழ்க்கையின் **அழகு மற்றும் எளிமை** என்னும் இரண்டு தலைப்புக்களில் தனது கருத்துக்களை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொதுநன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது என்ற திருத்தூதர் பவுலின் இறைவார்த்தைக்கேற்ப, கிறிஸ்துவின் அழகினால் உலகம் முழுவதும் மறைப்பணி ஒளிவீசட்டும் என்றும் கூறினார்.

துறவற ஆண்கள் மற்றும் பெண்களின் ஆன்மிகப் பயணத்தைத் திருஅவைத் தந்தையர்கள் தெய்வீக அழகின் அன்பு, தெய்வீக நன்மையின் கதிர்வீச்சு என்று வரையறுத்திருப்பது தற்செயலானது அல்ல என்றும், திருஅவையின் வாழும் மறைபொருளின் உருவமாக துறவிகள் இருக்கின்றார்கள் என்றும் கூறினார் திருத்தந்தை.

### துறவற வாழ்வின் அழகு

வெவ்வேறு சூழல்கள், காலங்கள் மற்றும் இடங்களில் உருவான துறவற இல்லத்தின் கதைகள் அனைத்தும் கடவுளின் அருள் ஒளிவீசும் திருமுகத்தில் சுடர்விடுகின்றது என்றும், செபத்தில் இறைத்தந்தையுடன் இணைந்திருந்தக் கரங்கள், இரக்கம் நிறைந்த இதயம், அநீதியையும் வன்முறையையும் தட்டிக்கேட்ட அவரது கண்கள், ஒதுக்கப்பட்ட ஏழை மக்களை தேடி பல பயணங்களை மேற்கொண்ட உறுதியான கால்கள், கொண்ட இயேசுவில் அடையாளப் படுத்தப்படுகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை.

துறவற சபையைத் தோற்றுவித்தவர்கள், தூய ஆவியின் தூண்டுதலால் இயேசுவின் இந்த அழகிய பண்புகளை அடையாளம் கண்டுகொண்டு, காலத்தின் தேவைக்கேற்ப துணிவு, படைப்பாற்றல், பிறரன்புப்பணி செய்யும் உறுதியான மனதுடன் செயலாற்றினார்கள் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பலவீனமானவர்கள், குழந்தைகள், நோயாளிகள், முதியவர்கள், இளைஞர்கள், போன்றோருக்கு பணியாற்றும் சமூக அர்ப்பணிப்பு கொண்டவர்களாக வாழ்ந்தனர் என்றும் எடுத்துரைத்தார்.

கிறிஸ்துவின் அழகைத்தேடி விதைக்கவும் அவர்களுக்கு உயிரூட்டிய கடவுளின் அன்பிற்கு செவிசாய்ப்பதன் வழியாகவும், அவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்றும், இதனால் நம்முடன் வாழும் சக மனிதர்களுக்குக் கடவுளின் முகத்தை வெளிப்படுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### துறவற வாழ்வின் எளிமை

தங்களுக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்து தேவையில்லாதவற்றைக் கைவிட்டு வாழ்ந்த சபையின் முன்னோர்களைப் போல

**நற்கருணைப் பிரசன்னத்தின் முன் அமர்ந்து அவருடன் உரையாட வேண்டும். மனனம் செய்யப்பட்ட செபங்களை செப்பதை விட இதயத்தின் ஆழத்தில் இருந்து இறைவனுடன் உரையாடுவது சாலச்சிறந்தது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்**

எளிமையாக வாழ வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், நற்செய்தியின் ஒளி வீசும் கடவுளின் எளிமையால் தங்களை நாளுக்கு நாள் உருவாக்கிக்கொள்ள அனுமதித்தார்கள் என்றும் கூறினார்.

கடவுளின் அன்பு எளிமையானது அவரது அழகு எளிமையானது என்று கூறிய திருத்தந்தை அவர்கள், பொறாமை என்பது ஒரு கொடிய நோய் அது நம்மை தாக்காதவாறு நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

# வட்டார தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி பேரவை 2024 (RPA)

தீபகற்ப மலேசிய வட்டா மேய்ப்புப் பணி பேரவை 2024 (Peninsular Malaysia Regional Pastoral Assembly 2024) எதிர்வரும் ஆகஸ்டு திங்கள் 25 முதல் 27 வரை, ஜொகூர், பிளந்தோங்கில் உள்ள மஜோடி மையத்தில் நடை பெறவுள்ளது. பினாங்கு, மலாக்கா-ஜொகூர் மற்றம் கோலாலம்பூர் மறை மாவட்டங்களிலிருந்து ஏறக்குறைய 550 பங்கேற்பாளர்கள் இம்மாநாட்டில் பங்கேற்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வட்டார தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி பேரவையானது, 2026-ல் நடைபெறவுள்ள சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியா ஆகியவற்றை உள்ளடக்கிய மலேசிய திருஅவையின் மேய்ப்புப்பணி பேரவையை (MPC2026) நோக்கிய பயணத்தின் பின்னணியில் சிறப்பாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இது மலேசியா மேய்ப்புப்பணி பேரவையின் ஒன்றிப்புக்கான ஆயர்களின் கூட்டு வளர்ச்சிப்படியைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

2020 இல் தொடங்கிய மலேசியா மேய்ப்புப்பணி பேரவையானது, நடைபெறவுள்ள 2026-ன் பேரவைக்கு சில பங்களிப்புகள் வழி உதவியாக உள்ளது என்பதை ஏற்க வேண்டும். 2022-ல் திருத்தந்தை தொடங்கிய அகில உலக திருஅவையின் கூட்டொருங்கியக்கப் (sy nodality) பயணம். திருத்தந்தையின் அழைப்பானது நமது 1976-ல் நடைபெற்ற அர்ஜினா மெந்தோ (மறுமலர்ச்சி) தீர்மானங்களை உறுதிபடுத்துவதாக அமைந்தது.

### வட்டார மேய்ப்புப்பணி பேரவையின் (2024) பலன்கள்

மேற்கண்ட பேரவையில் கடைப்பிடிக்கப்படும், பகுத்தறிதல் செயல்முறை மூன்று விடயங்களை வெற்றிப்பெறச் செய்யும் என்று நம்பப்படுகிறது:

1. தாம் ஏற்றுக்கொண்ட திருஅவை, குடும்பம், சமூகம் மற்றும் சுற்றுச் சூழல் ஆகிய நான்கு பகுதிகளில் நமது உள்ளூர் பங்குளைத் தொடர்ந்து மேம்படுத்த ஆயர் வழிநடத்துதலுக்கான ஆலோசனைகளை வழங்குதல்.

2. சபா மற்றும் சரவாக் ஆகிய இரு மறைமாவட்டங்களிலும் பின்தங்கியிருக் கும் இருக்கும் பொதுவான விடயங்கள் கண்டறியப்பட்டு, அவற்றை தீபகற்ப மலேசியா திருஅவை (PMC) பேரவையின் கவனத்திறுகுக் கொண்டு வருதல்.

3. மலேசிய மண்ணில், மலேசிய திருஅவையாக இருப்பது என்பதில் அடங்கியுள்ள உரிமை, அடையாளம், அன்பு மற்றும் பாராட்டு உணர்வை நோக்கிய ஒரு பயணத்தையும் உரையாடலையும் தொடங்குதல்.

### கொண்டாடுதல், செவிமடுத்தல் & ஒன்றித்துப் பயணித்தல்

ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைத்தூது என்ற உத்வேகத்தில் வட்டார மேய்ப்புப் பணி பேரவையின் (RPA) கருப்பொருளான 'கொண்டாடுதல், செவிமடுத்தல் & ஒன்றித்துப் பயணித்தல்' என்பது 1976-ல் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான செயல்படுகளையும் முடக்கிவிடுவதாக உள்ளது. நம்பிக்கை வாழ்வை ஒன்றாகக் கொண்டாடுவது, திருஅவை மற்றும் சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்ட குரல்களைக் கேட்பது மற்றும் தூய ஆவியானவருக்குச் செவிசாய்க்கும் போது விசுவாசத் திருப்பயணிகளாக ஒன்றாக செயல்படுவதன் முக்கியத்துவத்தை நடைபெறவுள்ள வட்டார மேய்ப்புப்பணி பேரவை (RPA) 2024 வலியுறுத்தும்.




மலேசியாவின் அனைத்து மறைமாவட்டங்களும் வட்டார மேய்ப்புப்பணி பேரவை (RPA) 2024- நோக்கிய நமது பயணத்திற்காகவும், இப்பேரவையின் விளைவாக வெளிவரும் இறைவன் செய்திக்காகவும் இறைவேண்டலில் ஈடுபடுகிறது. மலேசிய கத்தோலிக்க திருஅவை வரலாற்றில் இந்த முக்கிய பேரவை ஒன்றுகூடலில் பங்கேற்பாளர்கள் சிறப்பான பங்களிப்பை நல்குவார்கள் என நம்புவோம்.

# பாரிட் புந்தார் ஆலய சீரமைப்புப் பணிக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன

**பாரிட் புந்தார், பேராக்:** இங்குள்ள புனித ஆரோக்கிய அன்னை பங்கு தேவாலயத்தின் மறுசீரமைப்பு திட்டத்திற்கான நிதி திரட்டும் முயற்சிகளின் ஒரு பகுதியாக உணவு மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் கடந்த ஜூலை 7 அன்று ஏற்பாடு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பாரிட் புந்தார் வட்டார மக்கள், பினாங்கு மற்றும் பட்டர்வெர்த் பகுதிகளில் இருந்தும் ஆதரவாளர்கள், நன்கொடையாளர்கள் என பலர் திரளாக வருகைத் தந்து கலந்து சிறப்பித்தனர். அன்று குறிப்பிடத்தக்க வகையில் பல்வேறு உணவு மற்றும் பொருள்கள் விற்பனைக்கான அங்காடி கடைகளுக்கு ஏற்பாடு செய்யப்படிருந்தது. இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் ஒரே குடும்ப உணர்வோடும் நட்புறவோடும் கலந்துகொண்டனர் என்பது உணரப் பட்டது.

பங்குத்தந்தை அருள்பணி மார்ட்டின் அருளாந்து அவர்கள் அவரது உரையில் சீரமைப்பின் அவசியத்தை எடுத்துரைத்



தார். சுமார் 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலய கட்டிடம் வழக்கமான பராமரிப்புக்கு

மட்டுமே இதுவரை உட்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். இப்போது, அதன் கூரை பகுதியில் பெரும் பழுது பார்த்தல் இன்றியமையாத ஒன்றாக உள்ளதென்றும், பெரும் மழைக் காலத்தில் ஏற்படும் தொடர்ச்சியான வெள்ளத்தால் ஆலய வளாகமும் பழுதடைந்து வருவதாகவும் கவலை தெரிவித்தார். அத்தோடு, ஆலயச் சுற்றுச்சூழலை மேலும் வழிபாட்டிற்கு




ஏற்றதாக மாற்றவும், வழிபாட்டு உணர்வை மேம்படுத்தவும் இச்சீரமைப்புத் திட்டம் கடப்பாடு கொண்டுள்ளதாகவும் விவரித்தார். ஆலயத்தின் பழமை மின்கம்பிகளையும் புதுப்பிக்க வேண்டிய அவசியம் நிலவுவதையும் சுட்டிக்காட்டினார்.

பங்கு பணிக்குழுக்களால் சீரமைப்புக்கான நிதி திரட்ட தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், RM 3 மில்லியனுக்குக் குறையாத மறுசீரமைப்புக் கான செலவு குறிப்பிடத்தக்க சவாலாகவே உள்ளது என்றும், மேற்கூறிய விரிவாக்கத் திட்டங்களை நிறைவேற்ற நிதி திரட்டும் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அருள்பணி மார்ட்டின் வலியுறுத்தினார்.

எனவே, கட்டிட மறுசீரமைப்புப் பணி நிதிக்கு நன்கொடை அளிக்க ஆர்வம் உள்ளவர்கள், ஆலய அலுவலகத்தை 05-7102220 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது மேலும் விவரங்களுக்கு olgh.parit.buntar@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம் என்று பங்குத்தந்தை பணிவன்போடு கேட்டுக்கொண்டார்.

# திருஅவையில் ஒன்றிப்பு, பங்கெடுப்பு மற்றும் தூதுரை-கிள்ளான் பங்கில் பயிலரங்கம்

**கிள்ளான்:** கடந்த 13.7.2024 அன்று, கிள்ளான் லூர்து அன்னைப் பங்கில் "திருஅவையில் ஒன்றிப்பு, பங்கெடுப்பு மற்றும் மறைத்தூதுரை" எனும் கருப் பொருளில், பங்கின் அனைத்துப் பணிக் காட்டி தெளிவுப்படுத்தினார். ஒன்றித்துப் பயணிக்கும் இறைமக்களின் பயணமானது திருமுழுக்கில் தொடங்கி இறுதியில் விண்ணகத்தில் இறைவனைச் சந்திப் பதில்தான் முடிவடைகிறது. ஆதலால்,



குழுவினருக்குமாக தமிழ் திருத்தூதுப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் உருவாக்கப் பயிற்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சியில் ஏறக்குறைய 80 பேர் கலந்துக்கொண்டனர். இந்த நிகழ்வைப் பங்குத்தந்தை அருட்பணி கிரிகோரி சான் அவர்கள் தொடக்க உரையுடன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து அருட்பணி ஞான செல்வம் அவர்கள் இந்த பயிற்சியைச் சிறப்பாக வழிநடத் தினார்.

முதல் பகுதியாக, நாம் எப்படி ஆன்மீகத்தில் வளர்ச்சிபெறுவதுப் பற்றி பகிர்ந்துகொண்டார். நம் அன்றாட நம்பிக்கை வாழ்க்கையில் இயேசுவோடு நெருங்கியிருக்க வேண்டியதன் அவசியம் மற்றும் அதற்கான வழிவகைகளை புனிதர்களின் வாழ்வை முன்வைத்து எடுத்தியம்பினார். சிறப்பாக அன்னை திரேசாவைப் போல 'சிறிய செயலில் பெரிய அன்பை வெளிப்படுத்தி, கடவுளிடம் மற்றவர்களை அழைத்துச்செல்ல வேண்டும் என்றார்.

தொடர்ந்து, அவர்தம் விளக்கவுரையில் ஒவ்வொரு பணிக்குழு ஒருங்கிணைப்பாளரும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதோடு, அதிகாரத்தைச் செலுத்தாமல் பணிவிடைப் புரிவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை யோவான் 13:14 பகுதியை மேற்கோள் திருஅவை இறைவனோடு பயணிக்கும் தோழர்களாகச், செவிமடுப்பவர்களாக, வெளிப்படைத் தன்மையோடு பணி செய்பவர்களாக இருக்க வேண்டும் என்று வழியுறுத்தினார்.

மேலும் தூய ஆவியானவருக்குத் திறந்த தன்மையோடு விளங்கவும், ஓர் உண்மையான தலைவருக்கு உணர்ச்சி, இரக்கம், நன்னடத்தை, நேரிய நோக்கம், நல்ல மதிப்பீடு மற்றும் சுய ஒழுக்கம் இன்றியமையாதது என்றார். பின்னர், 10 குழுக்களாக பிரித்து திருஅவை மற்றும் பணித்துவத்தைப் பற்றிய கேள்விகளுக்கு குழுவோடு சேர்ந்து அனைவரும் சிறப்பான கருத்துக்களை பகிர்ந்தார்கள். அவர்கள் ஒன்றித்தல், உறையாடல், குடும்ப வாழ்வு, இறைவார்த்தை, நற்கருணை பற்றியும் பகிர்ந்தார்கள்.

நிறைவாக, அருள்பணி ஞான செல்வம் அவர்கள் மாலை 3 மணிக்கு, திருமணி ஆராதனையோடு பயிலரங்கத்தை நிறைவு செய்தார். திருமணி ஆராதனையின் போது இறைவார்த்தைகளை எடுத் துரைத்து அமைதியாக ஆண்டவரிடம் உரையாட செய்தார். தலைமைத்துவ பயிற்சியைச் சிறப்பாக வழங்கிய அருள்பணி ஞான செல்வம் அவர்களுக்கு நன்றி நவிலப்பட்டது

*திரேசா தாஸ் - கிள்ளான்*

# பிறர் துயர் துடைக்க உள்ளதைப் பகிர்வோம்!

இன்று பொதுக்காலத்தின் 17-ஆம் ஞாயிறு. இன்றைய வாசகங்கள் உணவு பகிர்தலைப் பற்றி வலியுறுத்துகின்றன. இன்றைய முதல்வாசகத்தில் இறைவாக்கினர் எலியா இருபது வாற்கோதுமை அப்பங்களைக் கொண்டு நூறு பேருக்கு உணவளிப்பதையும், நற்செய்தி வாசகத்தில், இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நீங்கலாக ஐயாயிரம் பேருக்கு உணவளிப்பதையும் குறித்து வாசிக்கின்றோம்

பெருந்திரளான மக்கள் இயேசுவுடன் இருந்தனர். அப்போது அவர் "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்" என்று பிலிப்பிடம் கேட்டார். பிலிப்புவோ "இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே" என்று கையை விரித்துவிட்டார். இயேசுவின் புதுமை செய்யும் ஆற்றலைப் பிலிப்பு மறுத்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அந்த கூட்டத்தில் ஒரு சிறுவன் தம்மிடமிருந்த உணவைக் கொண்டு வந்து கொடுக்கிறான்.

இச்சிறுவன் உணவைப் பகிர்ந்து வாழ்வதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறான். அவ்வளவு பெரிய கூட்டத்தில் எல்லோருக்கும் பசிக்கிறது என்பதை அறிந்ததும் தனது ஒருவேளை உணவான ஐந்து அப்பங்களும் மற்றும் இரண்டு மீன்களையும் கூட்டத்தோடு பகிர முன்வருகிறான் அச்சிறுவன். அவன் சிறுவன் ஆனாலும் உண்மையின் பெரியவன். இயேசு அவற்றைப் பலுகச் செய்து புதுமை செய்து மக்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களின் பசியைப் போக்குகின்றார். மக்கள் உண்டது போக மீதியான துண்டுகளும் ஏராளம் இருக்கின்றன.

1982-ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்கள் ஸ்காட்லாந்து நாட்டுக்குச் சென்றபோது எடின்பர்க் என்ற நகரிலே இளைஞர்களைப் பார்த்து இவ்வாறு சொன்னார். "நற்செய்தியில் வந்த சிறுவன், அவனிடமிருந்த அனைத்தையும் இயேசுவிடம் கொடுக்க, இயேசு வியத்தகு முறையில் ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார், எல்லாரும் உண்டப்பிறகு மீதியிருந்தது. நீங்கள் உங்கள் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைத்து விடுங்கள். அவர் உங்களை ஏற்றுக் கொள்வார், ஆசிர்வதிப்பார். நீங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக அவர் உங்கள் வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள்வார்" என்றார்.

மனிதருக்குத் தேவையான உணவுகளில் உடல் உணவே முதன்மையானது, இன்றியமையாதது. உடல் உணவு இல்லையேல் சாவுதான் விளைவு. இவ்வுணவு இல்லாத நேரத்தில் பிற நல்ல செயல்களுக்கு வாய்ப்பே இராது. "பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பது பழமொழி. உடல் உணவு இன்றி நலியும் மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கவும் இயலாது. "வயிற்றை நிரப்பியப்பின் வார்த்தையைப் போதி" என்பது முன்னோர் வாக்கு.

உடல் உணவால் மட்டும் மனிதர் மனிதராக வாழ்ந்து விட முடியாது. அவர்கள் உள்ளத்திற்கும் உணவு தேவை, "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்"(மத் 4:4) என்பது இயேசுவின் வாக்கு. வாழ வைக்கும் இறைவார்த்தையை மக்களுக்குத் தருவது இயேசுவின் முக்கியப் பணியாக இருந்தது. இறைவார்த்தை என்னும் உணவைத் தரும் இயேசு தாமே இறைவார்த்தையாக இருக்கிறார். "அவரே உணவு, வானகத்திலிருந்து வந்த உணவு (6:41) வாழ்வு தரும் உணவு".

இயேசுவின் ஆசிர்வதிக்கப்பட்ட உடலை உண்ணும் எவரும் பிறர் பசி அறிந்து செயல்படவும் "நாம் பலராயினும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம் (உரோமை 10:9) என்பதை ஆழமாக உணர்ந்துக் கொள்வோம்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி, கெடா*

**பொதுக்காலம்-17-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | 2 அர 4:42-44 |
| திரு.பாடல் | 145:10-11.15-16.17-18 |
| 2-ம் வாசகம் | எபே 4:1-6 |
| நற்செய்தி | யோவான் 6: 1-15 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**